பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 15

1 நபித்தோழர்களைக் குறித்து குர்ஆன் 23

2 நபித்தோழர்களின் சிறப்புகள் குறித்த நபிமொழிகள் 38

- சுவனத்திற்கான நற்செய்தி கூறப்பட்ட பத்து நபித்தோழர்களின் சிறப்பு 42
- பத்ருப் போரில் கலந்துகொண்டவர்கள் மற்றும் 'பைஅத்துர் ரிள்வான்' எனப்படும் உறுதிப்பிரமாணம் அளித்தவர்களின் சிறப்புகள் 42
- அபூபக்ர், உமர், உஸ்மான் ﷺ ஆகிய மூவருக்குமுள்ள பிரத்தியேகமான சிறப்புகள் 44
- அபூபக்ர் ﷺ அவர்களின் சிறப்புகள் 46
- உமர் இப்னுல் கத்தாப் ﷺ அவர்களின் சிறப்புகள் 48
- உஸ்மான் ﷺ அவர்களின் சிறப்புகள் 54
- அலீ ﷺ அவர்களின் சிறப்புகள் 57

கேள்விகள் 59

பின்னிணைப்பு

இமாம்களின் பாதை ஒரே பாதை 65

1. நேர்வழி ஒன்றே; அந்த வழிதான் நபித்தோழர்களின் வழி 67
2. யாரைப்போல் நபியைப் பின்பற்ற வேண்டும்? 69
3. யாரைப்போல் ஈமான் கொள்ள வேண்டும்? 70
4. நபித்தோழர்களின் பாதையைவிட்டுத் தடம்புரண்டால் என்னவாகும்? 71
5. ஏன் நபித்தோழர்களைப்போல் மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும்? 72

6. ஸலஃப் என்பவர்கள் யார்? 73
7. நபியவர்களின் இறுதி உபதேசம் 75
8. பிரிவினைகள் உண்டாகக் காரணம் பித்அத்துகளே 77

1

நபித்தோழர்களைக் குறித்து குர்ஆன்

❀

مُحَمَّدٌ رَسُولُ اللَّهِ وَالَّذِينَ مَعَهُ أَشِدَّاءُ عَلَى الْكُفَّارِ رُحَمَاءُ بَيْنَهُمْ تَرَاهُمْ رُكَّعًا سُجَّدًا يَبْتَغُونَ فَضْلًا مِنَ اللَّهِ وَرِضْوَانًا سِيمَاهُمْ فِي وُجُوهِهِمْ مِنْ أَثَرِ السُّجُودِ ذَلِكَ مَثَلُهُمْ فِي التَّوْرَاةِ وَمَثَلُهُمْ فِي الْإِنْجِيلِ كَزَرْعٍ أَخْرَجَ شَطْأَهُ فَآزَرَهُ فَاسْتَغْلَظَ فَاسْتَوَى عَلَى سُوقِهِ يُعْجِبُ الزُّرَّاعَ لِيَغِيظَ بِهِمُ الْكُفَّارَ وَعَدَ اللَّهُ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ مِنْهُمْ مَغْفِرَةً وَأَجْرًا عَظِيمًا

முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார். அவருடன் இருப்பவர்கள் நிராகரிப்பாளர்களின் விசயத்தில் கண்டிப்பானவர்கள்; தங்களுக் கிடையே கருணைமிக்கவர்கள். அவர்களை குனிந்தவர்களாகவும், சிரம்பணிந்தவர்களாகவும், அல்லாஹ்வின் அருளையும் அவ னது திருப்தியையும் தேடியவர்களாகவும் நீர் காண்பீர். சிரம் பணிந்ததனால் அவர்களின் முகங்களில் ஏற்பட்ட அடையாளமே அவர்களின் அடையாளமாகும். அவற்றைக் கொண்டே அவர் கள் அறிந்துகொள்ளப்படுகிறார்கள். இதுவே தவ்றாத்தில் அவர் களுக்குச் சொல்லப்பட்ட உதாரணமாகும். இன்ஜீலில் அவர்களது உதாரணம் ஒரு பயிரைப் போன்றதாகும். அது தன் குருத்தை வெளிப்படுத்தி, பின்னர் அதனைப் பலப்படுத்துகிறது. பின்னர், அது பருத்து தன் தண்டின்மீது நிலைத்து நிற்கிறது. அது விவசாயி களை மகிழ்ச்சியடையச் செய்கிறது. இவற்றைக்கொண்டு அல்லாஹ் நிராகரிப்பாளர்களை எரிச்சலடையச் செய்கிறான். ஆயினும், அவர்களில் நம்பிக்கைகொண்டு நற்செயல் புரி பவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பும், மகத்தான கூலியும் தருவதாக வாக்களிக்கிறான். *(குர்ஆன் 48:29)*

مُحَمَّدٌ رَسُولُ اللَّهِ وَالَّذِينَ مَعَهُ أَشِدَّاءُ عَلَى الْكُفَّارِ

‘முஹம்மது அல்லாஹ்வின் தூதராவார். அவருடன் இருப்பவர்கள் நிராகரிப்பாளர்களின் விசயத்தில் கண்டிப்பானவர்கள்’

அல்லாஹ்வின் வாக்கை மேலோங்கச் செய்வதற்காக நபித்தோழர் கள் அவனது பாதையில் போரிட்டார்கள். அவனது எதிரிகளிடம் கடுமையாக நடந்துகொண்டார்கள். ஆகவே, நாங்களும் அவர்களின் விசயத்தில் அலட்சியமாக இருக்கமாட்டோம். அவர்களை அழ கிய முறையில் இறைமார்க்கத்தின் பக்கம் அழைப்பு விடுப்போம். ஆனால், விவகாரம் சிக்கலாகிவிட்டால் இறை மார்க்கத்தை மேலோங் கச் செய்வதற்காக போர் புரியவும் தயங்கமாட்டோம். இது போன்ற சமயங்களில் கடினத்தைப் பிரயோகிப்பது மிகவும் அவசியமாகும். ஆனால், எல்லாச் சமயங்களிலும் கடினத்தைப் பிரயோகிப்பது நல்லதல்ல. இறைமார்க்கத்தை விட்டுத் தடுக்கப்படும்போது அங்குக் கடினத்தைப் பிரயோகிப்பது கட்டாயமாகிவிடுகிறது.

رُحَمَاءُ بَيْنَهُمْ

'தங்களுக்கிடையே கருணைமிக்கவர்கள்'

இது நபித்தோழர்களிடம் காணப்பட்ட முன்மாதிரிப் பண்பு. அவர்கள் தங்கள் சகோதரர்களிடையே அன்பானவர்களாகவும் கருணையாளர்களாகவும் இருப்பார்கள். அவர்களில் போர்க்களத்தில் காயமடைந்த ஒருவருக்குத் தண்ணீர் கொண்டு வரப்பட்டபோது தம் அருகில் தண்ணீர் வேண்டிக்கொண்டிருக்கும் மற்றொருவருக்குக் கொடுக்குமாறு கூறினார். இரண்டாமவர் மூன்றாமவரைக் கைகாட்ட, மூன்றாமவர் முதலாமவரைக் கைகாட்ட அதற்குள் ஒவ்வொருவராக மரணத்தைத் தழுவினார்கள், ஒருவரும் தண்ணீரைப் பருகாம லேயே. இவர்களைப் பற்றித்தான் அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்,

وَيُؤْثِرُونَ عَلَىٰ أَنْفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ خَصَاصَةٌ

'தாங்கள் ஏழ்மை நிலையில் இருந்தபோதிலும் தம்மைவிட அவர்களுக்கே முன்னுரிமை அளிப்பார்கள்.' (குர்ஆன் 59:9)

அவர்களிடைய அன்பு ஆட்சி செய்தது. இத்தகைய உயிரோட்ட முள்ள பண்புகளையே நான் இஸ்லாமிய இளைஞர்களிடம் உரு வாக்க விரும்புகிறேன். இவ்வாறு அன்பு செலுத்தக்கூடியவர் களையே அல்லாஹ் விரும்புகிறான்.

وَجَبَتْ مَحَبَّتِي لِلْمُتَحَابِّينَ فِيَّ وَالْمُتَجَالِسِينَ فِيَّ وَالْمُتَزَاوِرِينَ فِيَّ وَالْمُتَبَاذِلِينَ فِيَّ

'எனக்காக அன்பு செலுத்தக்கூடியவர்கள், எனக்காக சந்திக்கக் கூடியவர்கள், எனக்காகக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடக் கூடியவர்கள் ஆகியோர்மீது என் அன்பு உறுதியாகிவிட்டது.'

2

நபித்தோழர்களின் சிறப்புகள் குறித்த நபிமொழிகள்

❀

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

النُّجُومُ أَمَنَةٌ لِلسَّمَاءِ فَإِذَا ذَهَبَتْ النُّجُومُ أَتَى السَّمَاءَ مَا تُوعَدُ

'நட்சத்திரங்கள் வானத்திற்குப் பாதுகாப்பாகும். நட்சத்திரங்கள் இல்லையென்றால் வானத்திற்கு வாக்களிக்கப்பட்டது வந்து விடும்.' (அறிவிப்பு: அபூ மூஸா ﷺ, முஸ்லிம் 2531)

நட்சத்திரங்கள் வெடித்துச் சிதறிவிட்டால் வானம் பலவீனமடைந்து பிளந்துவிடும். அப்போது வானம் ஜைத்தூன் எண்ணெயைப் போன்று சிவப்பாகிவிடும்.

وَأَنَا أَمَنَةٌ لِأَصْحَابِي فَإِذَا ذَهَبْتُ أَتَى أَصْحَابِي مَا يُوعَدُونَ

'நான் என் தோழர்களுக்குப் பாதுகாப்பாவேன். நான் சென்று விட்டால் என் தோழர்களுக்கு வாக்களிக்கப்பட்டது வந்துவிடும்.' (அறிவிப்பு: அபூ மூஸா ﷺ, முஸ்லிம் 2531)

நபியவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் தோழர்களுக்குப் பாதுகாப் பாக இருந்தார்கள். நபியவர்கள் இறந்த பிறகே தோழர்களிடையே குழப்பங்களும் பிரச்சினைகளும் ஏற்பட்டன. தோழர்களிடையே பிளவுகளும் சண்டைகளும் ஏற்பட்டன. அல்லாஹ்வே நன்கறிந் தவன். இது குறித்து எதுவும் கூறாமல் இருப்பதே நமக்கு உகந்தது. நபியவர்களின் மரணத்திற்குப் பிறகே காட்டறபிகளில் ஒரு பிரிவினர் இஸ்லாமைத் துறந்தார்கள். நபித்தோழர்களைக் கொண்டு அல்லாஹ் இந்தக் குழப்பத்தை முடிவுக்குக் கொண்டு வந்தான்.

وَأَصْحَابِي أَمَنَةٌ لِأُمَّتِي فَإِذَا ذَهَبَ أَصْحَابِي أَتَى أُمَّتِي مَا يُوعَدُونَ

சுவனத்திற்கான நற்செய்தி கூறப்பட்ட பத்து நபித்தோழர்களின் சிறப்பு

நபியவர்கள் பத்து தோழர்களைப் பற்றிக் குறிப்பாகக் கூறியுள்ளார் கள். அவர்கள்தாம் தோழர்களில் சிறந்தவர்களாவர். நபியவர்கள் கூறியதாக அப்துற்றஹ்மான் இப்னு அவ்ஃப் ﵁ அறிவிக்கிறார்:

أَبُو بَكْرٍ فِي الْجَنَّةِ, وَعُمَرُ فِي الْجَنَّةِ, وَعُثْمَانُ فِي الْجَنَّةِ, وَعَلِيٌّ فِي الْجَنَّةِ, وَطَلْحَةُ فِي الْجَنَّةِ, وَالزُّبَيْرُ فِي الْجَنَّةِ, وَعَبْدُ الرَّحْمَنِ بْنُ عَوْفٍ فِي الْجَنَّةِ وَسَعْدُ بْنُ أَبِي وَقَّاصٍ فِي الْجَنَّةِ وَسَعِيدُ بْنُ زَيْدِ بْنِ عَمْرِو بْنِ نُفَيْلٍ فِي الْجَنَّةِ, وَأَبُو عُبَيْدَةَ بْنُ الْجَرَّاحِ فِي الْجَنَّةِ

‘அபூபக்ர், சுவனத்தில் இருப்பார். உமர், சுவனத்தில் இருப்பார். உஸ்மான், சுவனத்தில் இருப்பார். அலீ, சுவனத்தில்இருப்பார். தல்ஹா, சுவனத்தில் இருப்பார். ஜுபைர், சுவனத்தில் இருப்பார். அப்துற் றஹ்மான் இப்னு அவ்ஃப், சுவனத்தில் இருப்பார். சஅது இப்னு அபீவக்காஸ், சுவனத்தில் இருப்பார். ஸஈத் இப்னு ஜைத் இப்னு உமர் இப்னு நஃபீல், சுவனத்தில் இருப்பார். அபூஉபைதா இப்னுல் ஜர்ராஹ், சுவனத்தில் இருப்பார்.’ (அறிவிப்பு: அப்துற் றஹ்மான் இப்னு அவ்ஃப் ﵁, திர்மிதீ 3747, ஸஹீஹ் ஜாமிஃ 50)

இந்தப் பத்து தோழர்களும் நபியவர்களால் ‘சுவனவாசிகள்’ என்று நற்செய்தி கூறப்பட்டவர்களாவர்.

பத்ருப் போரில் கலந்துகொண்டவர்கள் மற்றும் ‘பைஅத்துர் ரிள்வான்’ எனப்படும் உறுதிப்பிரமாணம் அளித்தவர்களின் சிறப்புகள்

பத்ருப் போரில் கலந்துகொண்டவர்கள், அகபா ஒப்பந்தத்தில் கலந்துகொண்டவர்கள் மற்றும் ‘பைஅத்துர் ரிள்வான்’ எனப்படும் உறுதிப்பிரமாணம் அளித்தவர்கள் ஆகியோருக்கும் தனிச்சிறப்பு இருக்கின்றது. அவர்களின் சிறப்புகள் குறித்து ஹதீஸ் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

لَا يَدْخُلُ النَّارَ أَحَدٌ مِمَّنْ بَايَعَ تَحْتَ الشَّجَرَةِ

‘அந்த மரத்தின் கீழ் உறுதிப்பிரமாணம் அளித்தவர்கள் நரகம் புகமாட்டார்கள்.’ (அறிவிப்பு: ஜாபிர் ﵁, முஸ்லிம் 2496)

கிட்டத்தட்ட 1400 தோழர்கள், ‘போரின்போது நாங்கள் புறங்காட்டி ஓடமாட்டோம்’ என்று நபியவர்களிடம் வாக்குறுதி அளித்தார்கள்.

இதுதான் பத்ருப்போரில் கலந்துகொண்ட நபித்தோழர்களின் சிறப்பாகும்.

அபூபக்ர், உமர், உஸ்மான் ﷺ ஆகிய மூவருக்குமுள்ள பிரத்தியேகமான சிறப்புகள்

இம்மூவருக்கும் பிரத்தியேகமான சிறப்புகள் உள்ளன. அபூமூஸா அல்அஷ்அரீ ﷺ அறிவிக்கிறார்:

كُنْتُ مَعَ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فِي حَائِطٍ مِنْ حِيطَانِ المَدِينَةِ فَجَاءَ رَجُلٌ فَاسْتَفْتَحَ، فَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: افْتَحْ لَهُ وَبَشِّرْهُ بِالْجَنَّةِ فَفَتَحْتُ لَهُ، فَإِذَا أَبُو بَكْرٍ، فَبَشَّرْتُهُ بِمَا قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، فَحَمِدَ اللَّهَ، ثُمَّ جَاءَ رَجُلٌ فَاسْتَفْتَحَ، فَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: افْتَحْ لَهُ وَبَشِّرْهُ بِالْجَنَّةِ، فَفَتَحْتُ لَهُ فَإِذَا هُوَ عُمَرُ، فَأَخْبَرْتُهُ بِمَا قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، فَحَمِدَ اللَّهَ، ثُمَّ اسْتَفْتَحَ رَجُلٌ، فَقَالَ لِي: افْتَحْ لَهُ وَبَشِّرْهُ بِالْجَنَّةِ، عَلَى بَلْوَى تُصِيبُهُ

‘நான் நபியவர்களுடன் மதீனாவின் தோட்டங்களில் ஒன்றில் இருந்தேன். அப்போது ஒருவர் வந்து கதவைத் திறக்கும்படிக் கூறினார். நபியவர்கள், ‘அவருக்குத் திறந்துவிடுங்கள். சுவனம் கிடைக்கவிருப்பதாக அவருக்கு நற்செய்தி சொல்லுங்கள்’ என்று கூறினார்கள். அவருக்காகக் கதவு திறக்கப்பட்டது. அங்கு அபூபக்ர் ﷺ இருந்தார். நான் அவரிடம் நபியவர்கள் கூறிய நற்செய்தியைக் கூறினேன். அவர் அல்லாஹ்வைப் புகழ்ந்தார். பின்பு இன்னொருவர் வந்து, கதவைத் திறக்கும்படி வேண்டினார். நபியவர்கள், ‘அவருக்குத் திறந்துவிடுங்கள். சுவனம் கிடைக்கவிருப்பதாக அவருக்கு நற்செய்தி சொல்லுங்கள்’ என்று கூறினார்கள். அவருக்காகக் கதவு திறக்கப்பட்டது. அங்கு உமர் ﷺ இருந்தார். நபியவர்கள் கூறிய நற்செய்தியை நான் அவரிடம் கூறினேன். அவரும் அல்லாஹ்வைப் புகழ்ந்தார். பிறகு மற்றொருவர் கதவைத் திறக்கும்படி வேண்டினார். நபியவர்கள் என்னிடம், ‘அவருக்குத் திறந்துவிடுங்கள். அவருக்கு ஏற்படவிருக்கும் ஒரு துன்பத்திற்குப் பின்னால் சுவனம் கிடைக்கவிருப்பதாக அவருக்கு நற்செய்தி சொல்லுங்கள்’ என்று கூறினார்கள். அவருக்காகக் கதவு திறக்கப்பட்டது. அங்கு உஸ்மான் ﷺ இருந்தார். நபியவர்கள் கூறிய நற்செய்தியை நான் அவரிடம் கூறியபோது அவர் அல்லாஹ்வைப் புகழ்ந்தார். ‘எனக்கு ஏற்படவிருக்கும் துன்பத்

ருக்குச் சுவனம் உண்டு' என்று நபியவர்கள் கூறியபோது நான் அந்தப் படைக்கு உதவிசெய்து தயார்படுத்தினேன் என்பதை நீங்கள் அறியவில்லையா? என்று கேட்டபோது நபித்தோழர்கள் 'ஆம்' என்று கூறினார்கள். *(அஹ்மது 420)*

அலீ ﵁ அவர்களின் சிறப்புகள்

நபி ﷺ அவர்கள் அலீ ﵁ அவர்களிடம் கூறினார்கள்:

أَنْتَ مِنِّي وَأَنَا مِنْكَ

'நீர் என்னைச் சேர்ந்தவர். நான் உம்மைச் சேர்ந்தவர்.' *(அறிவிப்பு: பர்ராஃ இப்னு ஆஸிப் ﵁, புகாரீ 4251)*

உமர் ﵁ கூறுகிறார்:

تُوُفِّيَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَهُوَ عَنْهُ رَاضٍ

'அலியைக் குறித்து திருப்தியடைந்த நிலையில்தான் நபியவர்கள் மரணமடைந்தார்கள்.' *(புகாரீ 5/18)*

சஹல் இப்னு ஸஃத் ﵁ அறிவிக்கிறார்:

أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: لَأُعْطِيَنَّ الرَّايَةَ غَدًا رَجُلًا يَفْتَحُ اللَّهُ عَلَى يَدَيْهِ، قَالَ: فَبَاتَ النَّاسُ يَدُوكُونَ لَيْلَتَهُمْ أَيُّهُمْ يُعْطَاهَا، فَلَمَّا أَصْبَحَ النَّاسُ غَدَوْا عَلَى رَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، كُلُّهُمْ يَرْجُو أَنْ يُعْطَاهَا، فَقَالَ: أَيْنَ عَلِيُّ بْنُ أَبِي طَالِبٍ. فَقَالُوا: يَشْتَكِي عَيْنَيْهِ يَا رَسُولَ اللَّهِ، قَالَ: فَأَرْسِلُوا إِلَيْهِ فَأْتُونِي بِهِ. فَلَمَّا جَاءَ بَصَقَ فِي عَيْنَيْهِ وَدَعَا لَهُ، فَبَرَأَ حَتَّى كَأَنْ لَمْ يَكُنْ بِهِ وَجَعٌ، فَأَعْطَاهُ الرَّايَةَ، فَقَالَ عَلِيٌّ: يَا رَسُولَ اللَّهِ، أُقَاتِلُهُمْ حَتَّى يَكُونُوا مِثْلَنَا؟ فَقَالَ: انْفُذْ عَلَى رِسْلِكَ حَتَّى تَنْزِلَ بِسَاحَتِهِمْ، ثُمَّ ادْعُهُمْ إِلَى الإِسْلاَمِ، وَأَخْبِرْهُمْ بِمَا يَجِبُ عَلَيْهِمْ مِنْ حَقِّ اللَّهِ فِيهِ، فَوَاللَّهِ لَأَنْ يَهْدِيَ اللَّهُ بِكَ رَجُلًا وَاحِدًا، خَيْرٌ لَكَ مِنْ أَنْ يَكُونَ لَكَ حُمْرُ النَّعَمِ

கைபர் போரின்போது நபியவர்கள், 'நான் நாளை ஒரு மனிதரிடம் இந்தக் கொடியைக் கொடுக்கப் போகின்றேன். அவரது கரங்களில் அல்லாஹ் வெற்றியை அளிப்பான்' என்று கூறினார்கள். அந்த இரவை மக்கள் 'நபியவர்கள் யாரிடம் கொடியைக் கொடுக்கப் போகிறார்கள்' என்று சிந்தித்தவாறே கழித்தார்கள். மறுநாள் காலை ஒவ்வொருவரும் நபியவர்கள் தனக்குத்தான் கொடியைக் கொடுக்கப்போவதாக நம்பினார்கள். நபியவர்கள், 'அலீ இப்னு